

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி அணையிலிருந்து விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் தண்ணீரை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர். வைத்தார். உடன் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமை பொறியாளர் நீர்வளத்துறை முருகேசன், உடுமலை வருவாய் கோட்டாட்சியர் குமார் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வட்டக் கழக, கிளை கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியம், இடையார் கிராமத்தில்,அரியலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில்,கிராம கோவில்களின் 56 பூசாரிகளுக்கு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் ச.சி.சிவசங்கர் வழங்கினார். இந்நிகழ்வில் கழக சட்டதிட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணியன்,மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளர் தன.சேகர், ஆண்டிமடம் தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர் ஆர்.கலியபெருமாள், ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றியப் பொறுப்பாளர் கணேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### கள்ளக்குறிச்சி – திருக்கோவிலூர் – தி.அத்திப்பாக்கம்

# ஏரியில் விழுந்து உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 11-

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், தி. அத்திப்பாக்கம் கிராமத்திலுள்ள உள்ள ஏரியில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், தி. அத்திப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த சஞ்சீவி - நித்யா தம்பதியரின் மகன் செல்வன் தாரகேஷ் (வயது 10) என்பவர் மேற்படி கிராமத்திலுள்ள பெரிய ஏரியில் உறவினர்களுடன் குளிக்கச் சென்ற போது எதிர்பாராதவிதமாக தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன். மேலும் இச்சம்பவத்தில், உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### எஜமானர்களுக்கு சாமரம் வீச வீண் அவதூறு!

# தான் ‘டெல்லி அடிமை’ என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார் பழனிசாமி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி!

சென்னை, ஜூன் 11-

இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்துள்ள அறிக்கை வருமாறு:-



தாம்பரம் அரசு சேவை இல்லத்தில் காவலாளியால் மாணவிக்கு நிகழ்ந்த பாலியல் துன்புறுத்தல் சம்பவத்தில் குற்றவாளி உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளான். மேற்கொண்டு விடுதியில் தங்கியிருந்த 100-க்கும் மேற்பட்ட மாணவிகளிடம் வேறு யாரும் பாதிக்கப்பட்டனரா என தனித்தனியாக விசாரணை மேற்கொள்ளப்பட் டது.

முதல் கட்ட விசாரணையில் வேறு யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என தெரியவந்துள்ளது. இனி அரசு சேவை இல்லங்களில் பெண் காவலாளிகளை நியமிக்க சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இக்கொடுமையை மிக துணிச்சலோடு எதிர்கொண்டு புகார் அளித்த மாணவிக்கு இந்த திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும்.

திராவிட மாடல் ஆட்சியும், முதலமைச்சர் அவர்களும் பெண்களுக்கு அரணாக இருப்பதால் தான் இந்த மாதிரி குற்ற சம்பவங்களை எதிர்த்து தைரியமாக புகார் அளிக்க பெண்கள் முன்வரு கின்றனர். கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் பாதிக்கப்பட்ட பெண்களே தாக்குதல்களுக்குள்ளாகிய மோசமான சூழல் நிலவியதை தமிழ்நாட்டு பெண்கள் யாரும் இன்னும் மறக்கவில்லை. அப்படிப்பட்ட சூழலை எல்லாம் மாற்றி பெண்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி பெண்களின் முன்னேற்றத் திற்கு துணை நிற்பதோடு பெண்கள் பாதுகாப்பிலும் துளியும் சமரசமற்று செயலாற்றி வருகிறது திராவிட மாடல் அரசு. பெண்களுக்கு எதிரான குற்றங்க ளுக்கு எதிரான தண்டனையை மிகக் கடுமையாக்கியதோடு குற்றவாளிகளை விரைந்து கைது செய்து, விரைவான விசாரணை மேற்கொள்ளப்பட்டு உடனடியாக தண்டனையும் பெற்றுக்கொடுத்து வருகிறது திராவிடமாடல் அரசு. அரசின் இச்செயலையும் காவல்துறையின் செயல்பாட்டையும் உயர்நீதிமன்றமே பாராட்டியும் உள்ளது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கை அ.தி.மு.க. அரசு எப்படி கையாண்டது என்பது நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும்.

அ.தி.மு.க.வை சேர்ந்த குற்றவாளிகளைக் காப்பாற்ற புகார் அளித்த பெண்ணின் குடும்பத்தையே அ.தி.மு.க. குண்டர்களை விட்டுத் தாக்கிய கொடுமையும் அரங்கேறியது.

அப்படி *antiwomen admk government* ஐ நடத்திய பழனிசாமிக்கு, தற்போது குற்றங்களைத் தடுப்பதோடு மட்டுமல்லாமல் குற்றங்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு பெண்களுக்கு ஆதரவாக இருந்துவரும் திராவிட மாடல் அரசைப்பற்றி பேச எந்த தார்மீக உரிமையும் கிடையாது.

இதோ இப்போது கூட அரசு விரைவாக அனைத்து நடவடிக்கையும் மேற்கொண்ட பின்னும் இதன் மூலம் எப்படியாவது டெல்லியின் எஜமானர்களுக்கு சாமரம் வீச, பாதிக்கப்பட்ட மாணவியின் பக்கம் நிற்காமல் அதை வைத்து அரசியல் செய்யத் தொடங்கி விட்டார் பழனிசாமி. தமிழ்நாடு *Out of Control* என முதல்வர் கூறியதை மடைமாற்றும் வேலையில் இறங்கி உள்ளார் அடிமை பழனிசாமி.

எப்போதெல்லாம் அமித்ஷாவிற்கும் , டெல்லிக்கும் ஆபத்து வருகிறதோ அப்போதெல்லாம் *Delhi Control*லில் இருக்கும் பழனிசாமி ஓடோடி வந்து வீண் அவதூறுகளை பரப்பி காப்பாற்றத் துடிக்கிறார். தான் ‘டெல்லி அடிமை’ என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார் பழனிசாமி.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி, தனது அறிக்கையில் கூறியுள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம்-12**
ம. அ. 12. ந. க. எண். இ1 / 2107 / 2025

**குறுகிய கால மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

**மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் / மண்டலம் - 12 அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.**

மண்டலம்-12 - பகுதி-37- வார்டு-165 நங்கநல்லூர் ராம் நகர் 2வது பிரதான சாலை, புதிய நிழற்கூடம் **(Shelter)** அமைக்கும் பணி (சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி)

| | |
|---|---|
| பணியின் தோராய மதிப்பு ரூ. **78,24,008.41** | பணியின் முன்வைப்பு தொகை: ரூ.**79,000/-** |

ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **20.06.2025** அன்று மாலை **3.00 P.M.** மணி வரை

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நோம் : **23.06.2025** அன்று மாலை **3.30 P.M.** மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

செ.ம.தொ.இ / 2897 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — **மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் / ம- 12**




மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நன்னிலம் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட குடவாசல் வடக்கு ஒன்றியம், வயலூர் ஊராட்சியில் வயலூர், களப்பாரகரம், பூங்கொடி பகுதிகளில் ஒன்றிய செயலாளர் எஸ்.ஜோதிராமன் கழக கொடி ஏற்றி, பொதுமக்களுக்கும் இனிப்புகளோடு நல திட்டங்கள் உதவிகளை வழங்கினார். கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### கோவை வருகை தரும் கழகத் தலைவர்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக் - தொண்டாமுத்தூர் அ.ரவி - தளபதி முருகேசன் அறிக்கை!

கோவை, ஜூன் 11-

கோவை மாவட்டச் செயலாளர்கள் நா. கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பொன்னான திட்டங்களை செயல்படுத்தி, பொற்கால ஆட்சி நடத்தி வரும் திராவிட நாயகன், திராவிடச் சூரியன், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் இன்று (11.06.2025 - புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னையிலிருந்து விமானம் மூலம் கோவை வருகை தர உள்ளார். கழகத் தலைவர் அவர்களுக்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி. செந்தில்பாலாஜி அவர்களின் தலை மையில், ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் மாபெரும் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்படுகிறது என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அதுசமயம், இவ்வரவேற்பு நிகழ்ச்சிக்கு காலை 9.30 மணியளவில் கோவை விமான நிலையத்தில் கோவை மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேயர், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலத் தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக்கழகச் செயலாளர்கள், வட்டக்கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதிக்கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள், BLA2 (பாக முகவர்கள்), BLC பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்று மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் மாபெரும் பிரம்மாண்டமான முறையில் வரவேற்பு அளிக்க வேண்டும் என்று ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம் என்று தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### திருவாரூர் நகராட்சிக்கு

# நலத்திட்டங்களை நிறைவேற்றித் தந்த முதல்வருக்கு நன்றி!

## நகர்மன்ற கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம்!

திருவாரூர், ஜூன் 11-

திருவாரூர் நகராட்சிக்கு நிறைவேற்றித்தரப்பட்ட மக்கள் நலத்திட்டங்களுக்கு தமிழ் நாடு முதல்வர் தளபதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என். நேரு, பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து நகர்மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில் தலைமையில் நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவாரூர் நகரமன்றத்தின் கூட்டம் நகர்மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில் தலைமையில் நடைபெற்றது. நகராட்சி ஆணையர் (பொறுப்பு) சியாமளா முன்னிலை வகித்தார். கூட்டத்தில் நகர மன்ற உறுப்பினர்கள் வாரை எஸ்.பிரகாஷ், டி.செந்தில், இரா. சங்கர், எஸ்.என். அசோகன், ஆர்.ரஜினி சின்னா, அன்வர், வரதராஜன் உள்பட 30 வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நகர்ப்புற வளர்ச்சிக்கான திட்டங்களும் தேவைகளும் ஆரோக்கியமான முறையில் விவாதிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திருவாரூரின் அடையாளங்களுள் ஒன்றாக உருவாக்கித்தரப்பட்டிருக்கும் நகராட்சி புதிய காய்கனி அங்காடி தந்த தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களுக்கும் ,துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், திறந்து வைத்து சிறப்பித்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கும், இத்திட்டத்தினை பெற்றுத்தர உறுதுணையாக இருந்த பூண்டி கே. கலைவாணன் எம். எல்.ஏ., அவர்களுக்கும் நகர்மன்றத்தின் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்வது. நடப்பு ஆண்டில் மக்களுக்கு இடையூறாக திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்திட ரூ.35 லட்சம் ஒதுக்கீடு செய்வதுடன், நாய் பிடிக்கும் வாகனம் வாங்குவது .

திருவாரூர் நெய்விளக்கு தோப்பு பகுதியில் பகுதி நேர ரேஷன் கடை அமைக்க குப்பை கிடங்கிற்கு அருகில் உள்ள கட்டிடத்தை வழங்குவது, நகராட்சி புதிய பஸ் நிலையத்தில் பொதுமக்கள் வசதிக்காக போதிய வெளிச்சம் ஏற்படுத்திட புதிதாக எல்.இ.டி. விளக்குகள் அமைப்பது, திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான ராம்கே பள்ளி வளாகத்தில் பேவர் பிளாக் தளம் அமைப்பது, நகராட்சிக்கு சொந்தமான விஜயபுரம், ராம்கே பள்ளிகளுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள் அமைத்து தருவது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



சேலம் கிழக்கு மாவட்டம் நரசிங்கபுரம் நகர தி.மு.க., சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வந்து பிறந்த நாளையொட்டி, அவரது உருவப்படத்திற்கு நகர செயலாளர் என்.பி.வேல்முருகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார். இதில், நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர், நகர துணை செயலாளர்கள் பிரகாஷ், பரமசிவம், சாந்தி, அவைத்தலைவர் ராமசாமி, பொருளாளர் இளவரசு, நகர மன்ற உறுப்பினர்கள் தில்லை செல்வம், செல்வகுமார், சுப்பிரமணி, மனோகர், சங்கர், ஞானம், வெங்கடேஷ், ரமேஷ், புலித்தேவன், ராதா, மாரிமுத்து, பாண்டியன், செந்தில்குமார், அசோகன், சக்திவேல், மணிபாரதி, தியாகராஜன், பிரவீன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் நகர்மன்ற உறுப்பினர்களின் கூட்டம் நகர்மன்றத் தலைவர் புவனப்ரியாசெந்தில் தலைமையிலும், நகராட்சி ஆணையர் (பொறுப்பு) சியாமளா முன்னிலையிலும் நடைபெற்றது. நகர்மன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் கூட்டத்தில் பங்கேற்றனர்.